1996 மார்ச் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 174, திரு. கே. கந்தசாமி இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக சிங்கை கோவிந்தராசு, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

174—

நாடகங்கள் நடத்த அனுமதி

**22615—திரு. கே. கந்தசாமி:*

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் கிராமங்களில் நடத்தப்படும் நாடகங்களுக்கு காவல் துறையிடமிருந்து அனுமதி பெறும் முறையை எளிதாக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. மு. தென்னவன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

திரு. சிங்கை கோவிந்தராசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கலைத் துறையைப் பொறுத்தமட்டிலும் நாடகத் துறை மூலமாகத்தான் இன்று திரைத் துறையிலே பல்வேறு சாதனைகளைத் திரைத்துறை படைத்துக் கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட நாடகங்கள் கலைத் துறையின் உயிர் நாடியாக இருந்து வருகிறது. அந்த நாடகங்களை கிராமங்களில் திருவிழாக் காலங்களிலும் கோடைக் காலங்களிலும் கிராம மக்கள் ஏற்பாடு செய்வார்கள். அப்படி ஏற்பாடு செய்கின்ற நாடகங்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களும் மாவட்ட உயர் காவல்துறை அதிகாரி அவர்களும் அந்த நாடகத்தினுடைய கதை வசனங்கள் போன்ற தன்மைகளை எல்லாம் முதலிலேயே பெற்று, ஆய்வு செய்து இந்த நாடகங்கள் அனுமதிக்கப்படலாம் என்று சொன்னதற்குப் பின்னாலே அந்த நாடகங்கள் அங்கீகாரம் பெற்று இதுபோன்ற கிராமங்களிலே அந்த நாடகங்கள் நடத்த அனுமதிக்கப்படுகிறது. அந்த கிராமங்களில் நாடகங்கள் நடத்த விண்ணப்பிக்கின்றபோது அதிகாரிகளுடைய அனுமதி கிடைக்க காலதாமதம் ஏற்படுவதோடல்லாமல்

புறக்கணிக்கப்படுகிறது. ஆகவே, அப்படிப்பட்ட முறையை எளிதாக்குவதற்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோ அல்லது மாவட்ட மக்கள் தொடர்பு அதிகாரி அவர்கள் மூலமாகப் பெறுவதற்கு எளிதான முறையை—அந்த நிலையை ஏற்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாடகம் நடத்துவதற்கான அனுமதி பெறுகின்ற முறை தற்போது எளிதாக உள்ளது. எனவே எளிதாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய தேவை இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. கே.பி. ராஜு.

திரு. கே.பி. ராஜு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களிலே ஒரு நாடகம் நடத்த வேண்டும் என்றால் அது மாண்புமிகு உறுப்பினர் கோவிந்தராசு சொன்னதைப் போல ஒவ்வொரு காட்சியாக மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சென்று அதை விளக்கி அது தெளிவாகப் புரிந்த பிறகுதான் அனுமதி வழங்குகிறார்கள். அதிலே பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன. நாடகத்தை எளிமையாக நடத்துவதற்கும் கிராமங்களிலே பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய இடங்களிலே நடத்துவதற்கும் அந்த நாடகங்களுக்கு அனுமதியை காவல் துறையினரே கொடுத்தால் போதும் என்ற அரசு விதியைத் தளர்த்தி உத்தரவிடப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியைச் சார்ந்த காவல்துறை அதிகாரிகளுடைய பரிந்துரையைப் பெற்றுத்தான் மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதி வழங்குகிறார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் எஸ். சுந்தரராஜ்.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராம அளவில் நடத்தப்படுகின்ற பல்வேறு நாடகங்கள் பல்வேறு கிராமங்களிடையே கருத்து மோதல் ஏற்பட்டு பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதற்கு வாய்ப்பாக இருக்கிறது. அவ்வாறு இருக்கின்ற அந்த கிராமப் பகுதிகளில் அந்த நாடகங்கள் மூலம் பல்வேறு கருத்துக்களை பரப்புகின்ற அதே நல்ல வேளையில் மக்களுக்குப் புறம்பான கருத்துக்களை அந்த நாடகங்கள் வாயிலாகப் பரப்பாமல் இவ்வாறுதான் நாடகங்கள் இருக்கவேண்டும் என்று கட்டுப்படுத்தி கிராமங்களில் நடத்தப்படும் நாடகங்களுக்கு ஒரு கட்டுப்பாடு கொண்டு வருவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

1996 மார்ச் 1]

மாண்புமிகு திரு. மு. தென்னவன்: பேரவைத் தலைவர் அவர்களே, நாடகத்தின் மூலம் பரப்பப்படுகின்ற வசனங்கள், கதைகள், பாடல்கள் பிரச்சினைகளை உருவாக்குகின்ற காரணத்தால் கிராமங்களிடத்திலே சில பிரச்சினைகள் ஏற்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களே இங்கு சுட்டிக்காட்டினார்கள். ஆகவே அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடந்துவிடக்கூடாது என்பதற்காக அரசு இதிலே இப்படிப்பட்ட நிலையை எடுத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 175, திரு. கே.ஏ. மனோகரன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

175—

ஒசூர் தொகுதியில் குடிநீர்த் திட்டம்

*26716—திரு. கே.ஏ. மனோகரன்:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், ஓசூர் தொகுதி, சூளகிரி ஊராட்சி ஒன்றியத்திலுள்ள குடிசாதனள்ளி கிராமத்திற்கு குடிநீர்த் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): நடப்பு ஆண்டில் திட்டம் ஏதுமில்லை. இக்கிராமத்திற்கு இனிவரும் ஆண்டுகளில் அதன் முன்னுரிமைப்படியும், வாரிய விதிகளின்படியும் நிதிநிலைக்கேற்ப திட்டம் செயல்படுத்த ஆவன செய்யப்படும்.

திரு. கே.ஏ. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கிராமம் மிகப் பெரிய கிராமம். அதிலே மேட்டுப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினாலே நீர்நிலை ஆதாரங்கள் ஏற்படுத்த வேண்டும் என்று குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகப் போடப்பட்ட ஆழ்துளைக் கிணறுகளும் பயனில்லாத காரணத்தினாலே அதற்கு ஒரு